நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## குறுவை நெல் கொள்முதல்: முன்னேற்பாடுகள் தேவை

த. முருகானந்தம்

First Published : 21 Sep 2011 03:50:27 AM IST



தஞ்சாவூர், செப். 20: காவிரி டெல்டா மாவட்டங்களில் நிகழாண்டில் இலக்கைவிடக் கூடுதல் பரப்பளவில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு உள்ளதாலும், சராசரி மகசூல் அதிகரித்துள்ளதாலும், நெல் கொள்முதலின் போது பிரச்னைகள் நேரிடாமல் தடுக்கும் வகையில், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நுகர்பொருள் வாணிபக் கழகம் மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நிகழாண்டு 40,283 ஹெக்டேரில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பயிர் பரிசோதனைக்காக தேர்வு செய்யப்பட்ட 36 வயல்களில் அண்மையில் இரண்டு வயல்களில் அறுவடை நடைபெற்றது. இதில் அதிகபட்சமாக ஹெக்டேருக்கு 7,300 கிலோ மகசூல் கிடைத்தது. சராசரி மகசூல் 6,785 கிலோவாகும். கடந்த ஆண்டு சராசரி மகசூல் 5,648 கிலோவாக இருந்தது.

மேலும் கடந்த ஆண்டு 22,000 ஹெக்டேரில்தான் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

திருவாரூர் மாவட்டத்தில் 40 வயல்கள் பயிர் அறுவடை பரிசோதனைக்குத் தேர்வு செய்யப்பட்டதில், இதுவரை ஆறு வயல்களில் அறுவடை நடைபெற்றுள்ளது. சராசரி மகசூலாக ஹெக்டேருக்கு 6,000 கிலோ கிடைத்தது. கடந்த ஆண்டு சராசரி மகசூல் 5,432 கிலோவாக இருந்தது. மேலும் நிகழாண்டில் 42,848 ஹெக்டேரில் குறுவை சாகுபடி நடைபெற்றுள்ளது. இது இலக்கைக் காட்டிலும் 7,000 ஹெக்டேர் அதிகம்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் பயிர் அறுவடை பரிசோதனைக்கு 24 வயல்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒன்பது வயல்களில் குறுவை அறுவடை முடிந்துள்ளது. இங்கு சராசரி மகசூலாக ஹெக்டேருக்கு 6,949 கிலோ கிடைத்தது.

கடந்த ஆண்டு மகசூல், ஹெக்டேருக்கு 4,676 கிலோவாக இருந்தது. மேலும் இந்த மாவட்டத்திலும் சாகுபடி இலக்கான 36,600 ஹெக்டேரைவிடக் கூடுதலாக 38,820 ஹெக்டேரில் நடவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையில் முன்கூட்டியே தண்ணீர் திறக்கப்பட்டதும், சூல் பருவத்தில் பரவலாக மழை பெய்ததும்தான் மகசூல் அதிகரிக்கக் காரணமாகக் கூறப்படுகிறது.

எனவே காவிரி டெல்டா மாவட்டங்களில் நிகழாண்டில் கூடுதல் பரப்பளவில் இருந்து அதிகளவில் குறுவை நெல் மகசூல் கிடைக்க உள்ளது. இவற்றில் பெரும்பாலான பகுதிகளிலிலிருந்து, அரசின் நேரடிக் கொள்முதல் நிலையங்களுக்கு நெல் விற்பனைக்கு வர உள்ளது.

சாதாரணமாக மொத்த விளைச்சலில் 40 சதம் வெளிச்சந்தையில் விற்பனைக்குச் செல்வது வழக்கம். நிகழாண்டில் அரசு குவிண்டாலுக்கு அளிக்கும் கொள்முதல் விலை 1,100 ரூபாயைவிட வெளிச்சந்தையில் விலை மிகவும் குறைவாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

எனவே விவசாயிகளுக்கு அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மட்டுமே விற்பனைக்கான இடமாக உள்ளது. டெல்டா மாவட்டங்களில் அதிகபட்சமாக சுமார் 600 நெல் கொள்முதல் நிலையங்கள்தான் உள்ளன.

நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் பகுதியில் கூடுதலாக ஏழு இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கக் கோரி அண்மையில் போராட்டம் நடைபெற்றது. இதுபோன்ற கோரிக்கைகள் டெல்டா மாவட்டங்களில் வலுத்து வருகின்றன.

மேலும் கடந்த ஆண்டு சம்பா பருவத்தில் விவசாயிகளின் இருப்பிடத்துக்கே சென்று நெல்லைக் கொள்முதல் செய்வதில் தாமதம் ஏற்பட்டது. போதுமான வாகனங்கள், பணம், சாக்குப்பைகள், பணியாளர்கள் இல்லாததே இதற்குக் காரணங்களாகக் கூறப்பட்டது. சம்பா, தாளடி முடிந்ததும் நெல் மூட்டைகளைப் பாதுகாக்க வயல்வெளிகளில் இடம் இருக்கும்.

ஆனால் குறுவை முடிந்ததும் சம்பா, தாளடி நடவுப் பணிகளுக்கு விவசாயிகள் ஆயத்தமாவதால், நெல் மூட்டைகளை வயலில் இருப்புவைக்கவும், அதற்காகக் காத்திருப்பதும் அவர்களுக்கு சிரமமாக இருக்கும். இதனால் விவசாயிகளுக்கு குறுவை நெல் கொள்முதலில் பிரச்னைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

கூடுதல் பரப்பில், அதிக மகசூல் கிடைக்க இருப்பதால் விவசாயிகளிடம் அதிருப்தி ஏற்படாத வகையில், குறுவை நெல் கொள்முதல் செய்வதில் தேவையான முன்னேற்பாடுகளை நுகர்பொருள் வாணிபக் கழகம் இப்போதே மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

**ரூ. 2,000 கோடி விவசாய கடன்: எஸ்பிஐ இலக்கு**

First Published : 21 Sep 2011 03:17:45 AM IST

கும்பகோணம், செப். 20: நிகழ் நிதியாண்டில் ரூ. 2,000 கோடி விவசாயக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார் பாரத ஸ்டேட் வங்கியின் தலைமைப் பொதுமேலாளர் சந்திரசேகரன்.

இது தொடர்பாக கும்பகோணத்தில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

பாரத ஸ்டேட் வங்கிக்கு தமிழகம், புதுச்சேரி மாநிலங்களில் மொத்தம் 840 கிளைகள் உள்ளன. 2,000-க்கும் அதிகமான ஏடிஎம் மையங்கள் உள்ளன.

நிகழ் நிதியாண்டில் இதுவரை ரூ. 50,000 கோடி வரை வாடிக்கையாளர்களிடம் இருந்து டெபாசிட் தொகை பெறப்பட்டுள்ளது. பல்வேறு கடன்களாக ரூ. 72,000 கோடி வரை வழங்கப்பட்டுள்ளது.

நகைக் கடன் மட்டுமன்றி, விவசாயப் பணிகளுக்கு இயந்திரங்கள் வாங்குதல், பயிர்க் கடன் என அனைத்து வகையான கடன்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

நிகழ் நிதியாண்டில் ரூ. 2,000 கோடி விவசாயக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதில் செப்டம்பர் வரையிலான 6 மாதங்களில் ரூ. 750 கோடி வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

**தமிழகம், புதுவையில் மழை**

First Published : 21 Sep 2011 01:07:13 AM IST

Last Updated : 21 Sep 2011 01:08:27 AM IST

சென்னை, செப். 20: தமிழகம், புதுவையில் புதன்கிழமை (செப்.21) பரவலாக மழை பெய்யும் என வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் சென்னை, வேலூர் உள்ளிட்ட இடங்களில் வெப்பச்சலனத்தின் காரணமாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக, சென்னையிலும், அதன் புறநகர் பகுதியிலும் திங்கள்கிழமை இரவு பெய்த கனமழையால் பெரும்பாலான பிரதான சாலைகளில் தண்ணீர் தேங்கியது. வியாசர்பாடி, பெரம்பூர், ராயப்பேட்டை உள்ளிட்ட இடங்களில் வாகனங்களே செல்ல முடியாத அளவுக்கு மழை நீர் தேங்கிக் காணப்பட்டது.

கோயம்பேடு பகுதியில் பல மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்த மழை செவ்வாய்க்கிழமை காலை வரை நீடித்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. மேலும் பிற பகுதிகளிலிருந்து சென்னைக்கு வந்த பஸ்களும் நீண்ட நேரம் போக்குவரத்து நெரிசலில் சிக்கியதால் பயணிகளும் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

தமிழகத்தில் அதிகபட்சமாக சென்னையில் 110 மில்லிமீட்டர் மழை பதிவானது.

திருச்சி, கோவை ஆகிய மாவட்டங்களிலும் மழை பெய்தது. இந்த நிலையில், தமிழகம், புதுவையில் பெரும்பாலான பகுதிகளில் புதன்கிழமை பலத்த மழையும், ஒரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யும் எனவும், சென்னையை பொறுத்தவரை, இரவு நேரங்களில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யும் எனவும் வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

**வெங்காய ஏற்றுமதிக்கான தடை நீக்கம்**

First Published : 21 Sep 2011 01:45:14 AM IST

புது தில்லி,செப்.20 : விவசாயிகளின் கடும் எதிர்ப்பையடுத்து, வெங்காய ஏற்றுமதிக்கான தடையை மத்திய அரசு விலக்கிக் கொண்டுள்ளது.

கடந்த 9-ம் தேதி வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்தது. இதற்கு மகாராஷ்டிரம் மற்றும் கர்நாடக மாநில விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களில் ஈடுபட்டனர். சந்தைக்கு வெங்காயத்தை விற்பனைக்கு கொண்டு வர அவர்கள் மறுத்தனர். இதனால் தங்கள் லாபம் பாதிக்கப்படும் என்று விவசாயிகள் கூறினர். எனவே, தடை நீக்கப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில், தில்லியில் அதிகாரம் கொண்ட அமைச்சர்களின் குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையில் நடைபெற்றது. மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார், உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சர் கே வி தாமஸ் உள்ளிட்டோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் விலாஸ் ராவ் தேஷ்முக், வெங்காய ஏற்றுமதிக்கான தடை ரத்து செய்யப் படுவதாக கூறினார். வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டதும், தில்லியில் மொத்த விற்பனை விலையில் ரூ 2 முதல் ரூ.5 வரை குறைந்தது குறிப்பிடத்தக்கது.

**தேயிலை இறக்குமதி 22% குறைந்தது**

First Published : 21 Sep 2011 01:43:45 AM IST

புதுதில்லி, செப்.20 : நடப்பு நிதியாண்டில் ஏப்ரல்-ஜூலை வரையிலான காலத்தில், இந்தியாவின் தேயிலை இறக்குமதி 22 சதவீதம் குறைந்துள்ளது.

உலகளவில் தேயிலை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது மிகப் பெரிய நாடாகும். அதுபோன்று, தேயிலை பயன்பாட்டிலும் இந்தியா முன்னணியிலுள்ளது.

இந்தியாவில் தரமான தேயிலை உற்பத்தி செய்யப்பட்டாலும், உள்நாட்டுத் தேவைக்காக, வெளிநாடுகளிலிருந்தும் தேயிலை இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக, சீனா,

இலங்கை, வியத்நாம், ஈரான்,அர்ஜெண்டினா,நேபாளம் உள்ளிட்ட நாடுகளிலிருந்து தேயிலை இறக்குமதி செய்யப்படுகிறது.

நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான காலத்தில், இந்தியாவின் இறக்குமதி 22 சதவீதம் குறைந்து 51 லட்சம் டன்னாக உள்ளது. முந்தை நிதியாண்டில் இதே காலத்தில் இது 66 லட்சம் டன்னாக இருந்தது. இந்த ஆண்டு ஜூலை மாதத்தில், தேயில் இறக்குமதி 19 சதவீதம் சரிந்து 20 லட்சம் டன்னாக ஆக குறைந்தது. உலக தேயிலை உற்பத்தியில் இந்தியாவின் பங்கு 28 சதவீதமாகவும், தேயிலை வர்த்தகத்தில் அதன் பங்கு 14 சதவீதமாகவும் உள்ளது. இந்தியாவில் சுமார் 1,600 தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. இத்துறை சுமார் 20 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை அளித்து வருகிறது.

தினமலர்

**திசுவளர்ப்பு வாழை மையத்தின் சாதனை படைத்த பெண்மணி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2011,00:00 IST



கோவை மாவட்டம், வடவள்ளியில் வசித்துவரும் பூங்கொடி கடந்த 8 வருடங்களுக்கு முன்னால் தனியார் திசு வளர்ப்பு மையத்தில் ரூ.1500/- சம்பளத்தில் ஊழியராக பணிபுரிந்து வந்தார். இன்று தொழில் நுட்பக் கழக உதவியுடன் ரூ.8,00,000 வரை ஆண்டு வருமானம் ஈட்டி சுமார் 40க்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறார்.

திசுவளர்ப்பு வாழை பயிரிடுவதால் ஏற்படும் நன்மைகள்

* தரமான நோயில்லா கன்றுகள் தரப்படுகின்றன.

* ஒரே சீரான அறுவடை.

* அதிக விளைச்சல்.

* வருடம் முழுவதும் கன்றுகள் கிடைக்கும்.

விவசாயிகள் திசு வளர்ப்பு வாழைக்கன்றுகளை வருடம் முழுவதும் பயிர் செய்யலாம். ரொபஸ்டா, கிராண்ட் 9, செவ்வாழை, குள்ள வாழை, நேந்திரன், வில்லியம்ஸ் ஆகிய முக்கிய ரகங்கள் திசுவளர்ப்பு முறையில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

மேற்கூறிய இடைவெளியில் 1 அடி, 1 அடி அளவுள்ள குழிகள் எடுத்து குழியை சம அளவில் நன்கு மக்கிய தொழு உரமும் குழியின் மேல் மண்ணும் இத்துடன் 500 கிராம் ஜிப்சம், 45 கிராம் பியூரடான், 3ஜி கலந்த கலவையைவிட்டு நிரப்பி நீர் பாய்ச்சவும். திசுவளர்ப்பு வாழைக்கன்றுகளின் பாலிதீன் பையை முழுவதுமாக நீக்கி குழியின் நடுப்பகுதியின் பையிலிருந்து மண்ணுடன் தரைமட்டத்திற்கு நடவு செய்து உடன் நீர் பாய்ச்சவும் நல்லது.

உரங்களும் உரமிடுதலும்: நட்ட 45வது நாளில் நன்கு மக்கிய தொழு உரம் 5 கிலோ ஒரு மரத்திற்கு என்ற வகையில் இடவேண்டும். மண் பரிசோதனை செய்து நிலத்தின் தன்மைக்கேற்ப சிபாரிசுப்படி உரமிடுவது நல்ல பலனை அளிக்கும். திசு வாழைக்கன்றுகளை மாலை நேரங்களில் ஈர மண்ணில் நடுவது நல்லது. எமிசான் 1 கிராம், 1 லிட்டர் தண்ணீரில் (அ) பகலால் 1 கிராம் 1 லிட்டர் தண்ணீரில் (அ) பிளீசிங் பவுடர் 10 கிராம், 1 லிட்டர் நட்ட ஒரு வாரத்திற்குள் வேர்கள் நன்கு நனையுமாறு ஊற்றவும். இதையே நட்ட 3 மற்றும் 5ம் மாதங்களிலும் பின்பற்றவும்.

3வது மாதத்திலிருந்து தாய் மரத்திற்கு காயம் ஏற்படாதவண்ணம் மாதாமாதம் பக்கக் கன்றுகளை நீக்கிவரவும். காய்ந்த இலைகள், சருகுகளை அவ்வப்போது அகற்றி அப்புறப்படுத்தவும். தேவைக்கேற்ப மூங்கில், சவுக்குக் கம்புகளைக் கொண்டு மரத்திற்கு முட்டுக்கொடுக்கவும். 3வது, 4வது மற்றும் 7வது மாதங்களில் மண் அணைக்கவும். களைக்கட்டுப்பாடு அவசியம். தொடர்புக்கு: பூங்கொடி, கோவை. மொபைல்: 98422 33485, 92446 38689, போன்: 0422-653 8546.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2011,00:00 IST



த.வே.ப.க. சவுக்கு "எம்.டி.பி.2' - இந்த புதிய ரக சவுக்கு மரம் சமீபத்தில் வெளியிடப்பட்டது. எக்டருக்கு 125-150 டன் விளைச்சல் கொண்டது. வயது 36 மாதங்கள். அதிக அளவு விளைச்சலாக எக்டருக்கு 165 டன் கொடுக்கிறது. பருவம்: ஆண்டு முழுவதும் (பாசன வசதி இருப்பின்)
**சிறப்பியல்புகள்**: அதிக விளைச்சல், குறுகிய காலத்தில் அறுவடை, காகிதம், முட்டுக்கட்டை, உயிரி எரிபொருளாக பயன்பாடு.
**உருவாக்கம்**: விதையில்லா இனப்பெருக்க முறையில் ஈக்குவிஸ்டிபோலியா மற்றும் ஜீங்குனியாவில் இயற்கையாக உருவான வீரிய ஒட்டிலிருந்து தேர்வு.
**மேலும் விபரங்களுக்கு:** முதன்மையர், வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம்-641 301. **போன்**: 04254-225 064.

புது ரக காய்கறித் தட்டைப்பயறு "பி.கே.எம்.1' - தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் சமீபத்தில் வெளியிட்டுள்ள இந்த ரகம் காய்கறி தட்டையாக எக்டருக்கு 25 டன் கொடுக்கக்கூடியது. வயது 90-100 நாட்கள்.
பருவம்-ஆடிப்பட்டம் மற்றும் தைப்பட்டம். உருவாக்கம்: கன்னியாகுமரி பகுதியில் உள்ள வகையிலிருந்து தனி வழி தேர்வு.
**சிறப்பியல்புகள்**: அதிக விளைச்சல், மிக நீளமான காய்கள், 40 முதல் 45 செ.மீ., கொத்தாக காய்க்கும் திறன் (ஒரு கொத்துக்கு 3 முதல் 4 காய்கள்). மித அடர்வு தன்மையுடன் அதிக கிளைகள், விதைகள், சிவப்பு கலந்த பழுப்பு நிறம், முதல் அறுவடை 45 முதல் 50வது நாள், நார்ச்சத்து 0.89 கிராம்; புரதம் 21.88 மி.கி, / கிலோ.
**பயிரிட உகந்த மாவட்டங்கள்**: நாகர்கோவில், சேலம், திருச்சி, தேனி, பெரம்பலூர், திருவள்ளூர், அரியலூர், மதுரை, திண்டுக்கல் மற்றும் கடலூர். **மேலும் விபரங்களுக்கு**: முதன்மையர், தோட்டக்

கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம்-625 604. **போன்**: 04546-231 726.

**"அர்ஜுனா' அரசானிக்காய்**: தாய்லாந்து நிறுவனத்தின் எப்1 ஹைபிரிடு விதைகள் ஈஸ்ட்வெஸ்ட் நிறுவனம் வழங்குகிறது. அனுபவ விவசாயி சிவன்மலைச்சாமி, த/பெ.குமாரசாமி கவுண்டர், சி.அர்த்தநாரிபாளையம், ஆர்.பொன்னாபுரம் அஞ்சல், பொள்ளாச்சி-2, மொபைல்: 94421 61242. ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் 10 ஏக்கர் அளவில் பயிர் செய்கிறார். கேரளாவில் ஓணம் பண்டிகைக்கு பயிர் அறுவடைக்கு வரும்பொழுது நல்ல விலை கிடைக்கும் என்கிறார். விதைத்த நாளிலிருந்து முதல் பறிப்பு 65 முதல் 75 நாளில் ஆரம்பித்து 8-10 நாட்களுக்கு ஒரு முறை என பறிப்பு செய்யப்படுகிறது. மகசூல் அதிகபட்சமாக 15 டன் / எக்டர். சராசரி மகசூல் 12 டன் அதிகபட்சமாக கிலோ ரூ.10/-க்கு விற்றுள்ளார். மிகக்குறைந்த விலையாக கிலோ 55 பைசாவிற்கும் விற்றுள்ளார். **மேலும் விபரங்களுக்கு**: கார்த்திகேயன், மண்டல மேலாளர், ஈஸ்ட்வெஸ்ட் சீட்ஸ் இந்தியா பி.லிட்., **மொபைல்**: 96552 38393.

ஜெர்கின் சின்ன வெள்ளரியை வெற்றிகரமாக பயிர்செய்து ஏக்கருக்கு சுமார் ரூ.30,000 வரை லாபம் பெரும் அனுபவ விவசாயி ச.மச்சக்காளை, த/பெ.சடையன், முளையூர் போஸ்ட், நத்தம் தாலுகா, திண்டுக்கல்-624 401, **மொபைல்**: 99528 05366. **வெள்ளரி குறித்த விபரங்களுக்கு:** வெள்ளைச்சாமி, பின்னான் அக்ரோ நிறுவனம்,**மொபைல்:** 96556 90253, 96550 17047.-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**கத்தரி சாகுபடி - இயற்கை முறை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2011,00:00 IST



**சாகுபடிக்கு முதலில் தேவைப்படுவது நாற்றங்கால்.** இதன் பரப்பு 25 அடி நீளம். 4 அடி அகலம், 4 அங்குலம் உயரம் கொண்டதாக இருக்க வேண்டும். நாற்றங்காலுக்கு 500 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் இடவேண்டும். இதோடு இயற்கை உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா இவைகளை ஒரு கிலோ வீதம் போடவேண்டும். காய்கறி செடிகளில் தோன்றும் மிகக்கொடிய வாடல் நோயினைக் கட்டுப்படுத்த டிரைக்கோடெர்மா விரிடி என்னும் இயற்கை சம்பந்தப்பட்ட பூசணக்கொல்லி ஒரு கிலோ அளவினை நாற்றங்காலுக்கு இட்டு மண்ணினை நன்கு கொத்திவிட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 200 கிராம் விதை விதைக்க வேண்டும்.

நடவு வயலில் நல்ல வடிகால் வசதி உண்டாவதற்காக உளி கலப்பை கொண்டு உழவேண்டும். பிறகு நன்கு மக்கிய தொழு உரம் 15 டன் போட்டு நிலத்தை உழுது பார்சால் போடவேண்டும். (இரண்டரை x இரண்டு அடி) நாற்றங்காலில் இருந்து நல்ல திடமான 28 நாள் வயதுடைய நாற்றினை எடுத்து நடவு வயலில் நடவேண்டும். (பாருக்கு பார் இரண்டரை அடி, செடிக்கு செடி 2 அடி) நடவு நட்ட 21, 42, 63, 84 ஆகிய நாட்களில் ஒவ்வொரு முறையும் ஒரு டன் மக்கிய தொழு உரம், ஒரு கிலோ பாஸ்போ பாக்டீரியா, ஒரு கிலோ டிரைக்கோடெர்மா விரிடி இவைகளைக் கலந்து வயலில் இட்டு பாசனம் செய்ய வேண்டும். செடிகளுக்கு கவனமாக பயிர் பாதுகாப்பு செய்ய வேண்டும். நடவு நட்ட மூன்றுவாரம் கழித்து மாதம் இருமுறை உயிர் பூச்சிக்கொல்லி மருந்துகளான பவேரியா பாசியானா இதனை ஒரு லிட்டர் தண்ணீருக்கு மூன்று மில்லி அளவு கலந்து தெளிக்க வேண்டும். வாரம் ஒருமுறை பைட்டோபிராட் என்னும் இயற்கை பூச்சி விரட்டியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி அளவு கலந்து தெளிக்கவும்.

இந்த இரண்டு இயற்கை மருந்துகளும் வெகு சிறப்பாக செயல்பட்டு விவசாயிகள் விஷ மருந்துகளை உபயோகிப்பதில் இருந்து காப்பாற்றுகின்றன. வளரும் செடிகளுக்கு காலத்தில் பாசனம் செய்ய வேண்டும். இயற்கை முறையை அனுசரிக்கும்போது பாசன செலவில் மிச்சம் ஏற்படும். பாசன நீர் கிரகிக்கப்பட்டு பூமியை தளர கொத்திவிட வேண்டும். உடனே மக்கிய தொழு உரத்தை பூமிக்கு இட்டு பாசனம் செய்யலாம். விவசாயிகள் தாங்கள் சேகரித்துள்ள தொழு உரத்தை அவ்வப்போது மேலே விவரித்தபடி செடிகளுக்கு இட்டு வரவேண்டும். இதனால் செடிகள் வெகு செழிப்பாக வளர்ந்து வருகின்றன. மேற்கண்ட பணிகளை கவனத்தோடும், நம்பிக்கையோடும் செய்யும்போது கத்தரி செடிகள் நட்ட 75வது நாளிலிருந்து 120 நாட்கள் வரை அறுவடை கொடுத்துக் கொண்டிருக்கும். ஒரு ஏக்கரில் 65 கிலோ கொண்ட மூடை 135 கிடைக்கும்.

இயற்கை முறை சாகுபடியில் ஏக்கருக்கு ஆகும் செலவு ரூ.22,000 ஆகும். காய்கள் விற்பனையில் ரூ.68,000 கிடைக்கும்.

**இயற்கை விவசாயம் இளமையை அதிகரிக்கின்றது**: மகசூல் கொடுக்கும் நாட்களை அதிகரிக்கின்றது. செடிகள் அதிகம் காய்க்கும். காய்ப்பு சிறிது குறையும்பொழுது செடிகளை மீண்டும் கொத்திவிட்டு, நன்கு மக்கிய தொழு உரம் இட்டு பயிருக்கு இயற்கை முறை உரம் இட்டு பாசனம் செய்தால் செடிகள் வீரியம் கொண்டு காய்க்கும்.-எஸ்.எஸ்.நாகராஜன்

**மதுரை விவசாயக் கல்லூரியில் காய்கறி விதைகள் விற்பனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2011,00:08 IST

மதுரை : மதுரை விவசாயக் கல்லூரி தோட்டக்கலைத் துறை சார்பில் காய்கறி விதைகள், மர, பழமரக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. மாம்பழத்தில் அல்போன்சா, பங்கனபள்ளி, ஹுமாயூதீன் ரகங்கள், சப்போட்டா பிகேஎம் 1, 2 ரகங்கள், லக்னோ 49 ரக கொய்யா கன்றுகள் ரூ.20 முதல் ரூ.50 வரை. தக்காளி, மிளகாய், கத்தரி, வெண்டை, பீர்க்கு, புடலை, பாகற்காய் விதைகள் கிலோ ரூ.200 முதல் ரூ.700 வரையுள்ளன. வீட்டுத் தோட்டத்தில் பயிரிட ஏதுவாக சிறிய பாக்கெட்கள் விலை ரூ.பத்து. ஜாதிமல்லி, குண்டுமல்லி, நாட்டுரோஜா பதியன் ரகங்கள், குரோட்டன்ஸ், குத்துச்செடி, தங்க அரளி, இட்லிபூ, சங்குப்பூ, அழகுச் செடிகள் ரூ.20 முதல் ரூ.150 வரை. குல்மொஹர், சரக்கொன்றை, நாவல், புங்கன், வேம்புமரக்கன்றுகள் ரூ.20 முதல் விற்பனைக்குள்ளன. வாங்க விரும்புவோர் தோட்டக்கலைத் துறை அல்லது கல்லூரி முன் உள்ள விற்பனை நிலையத்தை அணுகலாம்.

**உழவர் சந்தைகளில் கடைகளை நடத்த ஆர்வமில்லை : விற்பனை குறைவால் விவசாயிகள் புறக்கணிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2011,01:32 IST

திருவள்ளூர் மாவட்டத்தில் இயங்கும் உழவர் சந்தைகளில், கடைகளை நடத்த, விவசாயிகள் ஆர்வம் காட்டாததால், உழவர் சந்தைகள், களை இழந்து காணப்படுகின்றன. விற்பனை குறைவு காரணமாக, உழவர் சந்தைகளை விவசாயிகள் புறக்கணிப்பதால், மாவட்டத்தில் மொத்தமுள்ள ஐந்து உழவர் சந்தைகளில் செயல்பட்டு வந்த, 146 கடைகளில் வெறும், 39 கடைகள் மட்டுமே தற்போது செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் விவசாயிகள் பயிரிடும் காய்கறிகள் மற்றும் கீரை வகைகளை கமிஷன் இல்லாமல் விற்பனை செய்யவும், உரிய விலை கிடைக்கவும், விவசாயிகள் பயனடையும் வகையிலும், தி.மு.க., ஆட்சியில் உழவர் சந்தை திட்டம் கொண்டு வரப்பட்டது. தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உழவர் சந்தை அமைக்கப்பட்டது. இந்த

சந்தையில் விவசாயிகள், தாங்கள் பயிர் செய்த காய்கறிகளை அறுவடை செய்து, அவர்களே விற்றுக் கொள்ளலாம். இதற்காக விவசாயிகள் எந்தவித கமிஷனும் தர வேண்டியதில்லை. மேலும், விவசாயிகளுக்கு உழவர் சந்தையில் இலவசமாக கடை ஒதுக்கி, தராசு மற்றும் எடைக் கற்களையும் வழங்கி வருகிறது.

குறைந்தளவு கடைகள்: திருவள்ளூர் மாவட்டத்தில் திருவள்ளூர், திருத்தணி, அம்பத்தூர், நாரவாரிகுப்பம், பருத்திப்பட்டு ஆகிய பகுதிகளில் உழவர் சந்தைகள் உள்ளன. துவக்கத்தில் நன்றாக செயல்பட்டு வந்த உழவர் சந்தை, படிப்படியாக விவசாயிகள் வருகை குறைந்ததால், மூடும் நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, அரக்கோணம் சாலையில் செயல்பட்டு வரும், திருத்தணி உழவர் சந்தையில், 42 கடைகள் உள்ளன. இந்த உழவர் சந்தை, 2000ல், அக்டோபர் 25ம் தேதி திறக்கப்பட்டது. துவக்கத்தில் விவசாயிகள் ஆர்வமாக காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்தனர். பின்னர் படிப்படியாக குறைந்து, தற்போது 8 கடைகள் மட்டுமே இயங்குகின்றன. இக்கடைகளிலும் விவசாயிகள் யாரும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆர்வம் இல்லை: சில வியாபாரிகள் இலவசமாக கடை கிடைக்கிறது என்பதால்தான், உழவர் சந்தையில் காய்கறி கடைகளை வைத்து நடத்தி வருகின்றனர்.

தற்போது வேளாண் மை கூட்டுறவுத்துறை மூலம் நடத்தப்படும் கடையிலிருந்து திருத்தணி, திருவாலங்காடு, மத்தூர் ஆகிய கோவில்களுக்கும், மாணவர் விடுதி மற்றும் கிளை சிறைச்சாலை ஆகியவைகளுக்கு மட்டும் காய்கறிகள் சப்ளை செய்யப்படுகின்றன. ஆனால், பொதுமக்களிடம் போதிய வரவேற்பு இல்லாததால், விவசாயிகளிடம் ஆர்வம் குறைந்துவிட்டது. இதனால், தனியார் காய்கறி மார்க்கெட்டிற்கு மக்கள் செல்கின்றனர்.
இதே நிலை தொடர்ந்தால் சில மாதங்களில், உழவர் சந்தை மூடுவிழா காணும் நிலை ஏற்படும். இதுகுறித்து, காஞ்சிபுரம் வேளாண்மை விற்பனைத்துறை அதிகாரி கூறுகையில், "உழவர் சந்தை மூன்று ஆண்டுகளாக, காஞ்சிபுரம் வேளாண்மை விற்பனைக் குழு மூலம் செயல்பட்டு வருகிறது. காலை 7 மணி முதல் மதியம் 1 மணி வரை திறந்திருக்கும். விவசாயிகள் வந்து கடையை தேர்ந்தெடுத்து காய்கறிகளை விற்பனை செய்து கொள்ளலாம்.
தற்போது, எட்டு முதல் பத்து கடைகள் வரை தான் இயங்குகின்றன. விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள் ளது. விவசாய நிலங்கள் வீட்டு மனைகளாக மாறுவதாலும், நிலத்தடி நீர் மட்டம் குறைவாலும் பெரும்பாலான விவசாயிகள், விவசாயம் செய்வதில் ஆர்வம் காட்டுவதில் லை. குறிப்பாக, காய்கறி வகைகளை பயிர் செய்வதில் அக்கறை காட்டுவது இல்லை," என்றார்.

**விதை உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 21,2011,00:04 IST

உடுமலை : கோவை, திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கு விதை சான்று நடைமுறைகள் குறித்த பயிற்சி வகுப்பு இன்று(செப்.,21) உடுமலையில் நடக்கிறது. விதைசான்று உதவி இயக்குனர் மோகன்ராஜ்சாமுவேல் அறிக்கை: உடுமலை வேளாண் ஒழுங்கு முறை விற்பனை கூட அலுவலக கூட்ட அரங்கில் காலை 10.00 மணிக்கு பயிற்சி துவங்குகிறது. விதை சான்று அலுவலர்(தொழில்நுட்பம்)பெருமாள்சாமி விதைப்பண்ணைகளை சான்றளிப்பின் கீழ் பதிவு செய்ய கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்தும், விதை சான்று அலுவலர்கள் மகாலிங்கம் விதைப்பண்ணைகள் ஆய்வு; உதயகுமார் விதை சுத்திகரிப்பு நிலைய பணிகள்; ராஜராம் விதைகுவியல்களை திறனாய்வு செய்தல் குறித்தும் பயிற்சி அளிக்க உள்ளனர். பயிற்சி வகுப்பில் கோவை, திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த தனியார் விதை உற்பத்தியாளர்கள் பங்கேற்க வேண்டும்.

**கடலோரப் பகுதியில் தொடரும் மழை காய்கறிபயிர் நாசம்: நெல் அறுவடை பாதிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2011,20:52 IST

கடலூர் : கடலோரப் பகுதியில் தினம் தினம் பெய்து வரும் மழையால் விவசாயிகள் விளைந்த நெல்லை அறுவடை செய்ய முடியாமல் தவித்து வருகின்றனர். வடகிழக்கு பருவ காற்றின் மூலம் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் நமக்கு அதிகமான மழை பெய்யும் மாதங்களாகும். அப்போது விவசாயிகள் நெற்பயிரை மட்டுமே பயிர் செய்து வருவது வழக்கம். தற்போது முன்பருவத்தில் நெல் பயிர் செய்து அறுவடைக்கு தயாராக உள்ள நிலையில் பெய்து வரும் மழையால் வயல்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. கடலூர் ஒன்றியத்தில் பல இடங்களில் நிலத்தடி நீரைக்கொண்டு நடவு செய்த வயல்களில் அறுவடை இயந்திரம் உள்ளே செல்ல முடியாத நிலை உள்ளது.

ஆடிப்பட்டத்தில் விதைக்கப்படும் பல்வேறு பயிர்கள் எப்போதாவது பெய்யும் மழையை வைத்து தான் பயிர் விளைச்சல் தருவது வழக்கம். ஆனால் தற்போது வழக்கத்திற்கு மாறாக முன் எப்போதும் இல்லாத அளவில் செப்டம்பர் மாதம் முழுவதும் வெப்ப சலனம், மேக வெடிப்பு, மேக சுழற்சி போன்ற புதிய காரணங்களால் தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு ஒருமுறை மழை பெய்கிறது. இதில் கடலோரப் பகுதியான கடலூர், குள்ளஞ்சாவடி, ஆலப்பாக்கம் பகுதியில்

காய்கறிப்பயிர்கள், பூச்செடிகள் வேர்கள் அழுகி அழிந்து வருகின்றன. இதனால் உள்ளூர் காய்கறி, பூக்கள் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் பெய்த மழை அளவு மி.மீ., விவரம்:
பண்ருட்டி 19.60, கொத்தவாச்சேரி 17, கீழ்ச்செருவாய் 10, கடலூரில் அதிகபட்சமாக 48.60 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

**செஞ்சி பகுதியில் வேர்க்கடலை சாகுபடி அதிகரிப்பு : கூலி ஆள் கிடைக்காமல் விவசாயிகள் அவதி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2011,21:03 IST

செஞ்சி : செஞ்சி பகுதியில் இந்த ஆண்டு வழக்கத்தை விட கூடுதலாக வேர்க்கடலை சாகுபடி செய்துள்ளனர். வேர்கடலை பயிர்களில் களை எடுக்கவும், அறுவடை பணிக்கும் கூலி ஆட்கள் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். விவசாய வேலைகளை மட்டுமே நம்பி கிராமங்களில் வாழ்பவர்கள் வறட்சி காலத்தில் வேலை தேடி நகரங்களுக்கு செல்வதை தடுப்பதற்காக மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டம் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை வழங்க உத்தரவாதம் அளிக்கப்பட்டது. கிராமத்தின் நீர்நிலைகளையும், நீர் வரத்து வாய்க்கால்களையும் மேம்படுத்தவும் இதில் திட்டமிடப்பட்டது.

வேலை வாய்ப்புக்கும், கிராமப்புற வளர்ச்சிக்கும் வழி செய்யும் இந்த திட்டம் தற்போது வேலை செய்யாமலேயே கூலி கொடுக்கும் இலவச திட்டமாக மாறி விட்டது. ஊழல் மலிந்து விட்ட இந்த திட்டத்தை செயல்படுத்துவதால் கிராமப்புறத்தில் விவசாய வேலைகளுக்கு கடும் ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வேலைக்கு வரும் குறைந்த நபர்களுக்கும் கூடுதல் கூலி கேட்கின்றனர். இந்த ஆண்டு குறித்த காலத்தில் துவங்கிய பருவ மழையினால் செஞ்சி பகுதியில் வழக்கத்தை விட கூடுதலாக வேர்க்கடலை சாகுபடி செய்துள்ளனர். வழக்கமாக 20 ஆயிரம் ஏக்கர் பரப்பில் செய்யப்படும் சாகுபடி இந்தாண்டு 25 ஆயிரம் ஏக்கரை எட்டி உள்ளது.

வேர்க்கடலையில் களை எடுக்கும் பணி தற்போது தீவிரமாக நடந்து வருகிறது. இதற்கு தேவையான ஆட்கள் கிடைக்காமல் பல இடங்களில் பணிகள் தடை பட்டுள்ளது. அடுத்த சில நாட்களில் வேர்கடலை எடுக்கும் பணியும் துவங்கி விடும்.இதற்கும் ஆட்கள் கிடைப்பது அரிதாகி விடும் என விவசாயிகள் இப்போதே அச்சமடைந்துள்ளனர். வேர்க்கடலை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டால், வேர்க்கடலை மண்ணுக்குள்ளேயே முளைத்து தரம் குறைந்து நஷ்டம் ஏற்படும். இதே போல் செஞ்சி பகுதியில் தற்போது தீவிர நெல் சாகுபடி நடந்து வருகிறது. இதில் நடவு செய்ய

கூடுதல் ஆட்கள் தேவைப்படுகின்றனர். இதற்கும் ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாய வேலைகள் தடையின்றி நடப்பதற்கு கூலி ஆட்கள் கிடைக்காமல் செஞ்சி பகுதி விவசாயிகள் மிகுந்த அவதிப்பட்டு வருகின்றனர்.

**பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த பஞ்சகவ்யம் பயன்படுத்த அறிவுரை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2011,23:27 IST

தர்மபுரி: "தர்மபுரி மாவட்டத்தில் பயிர்களின் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த, பஞ்சகவ்யம் பயன்படுத்த வேண்டும்' என, வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.
உழவர் வயல்வெளி பள்ளி பாடத்திட்ட பயிற்சி துறை வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் நூற்பாலைகளுக்கு, 70 லட்சம் பேல்கள் பருத்தி தேவைப்படுகிறது.

தமிழகத்தில் உற்பத்தியாகும் மொத்த பருத்தியின் உற்பத்தி, 50 லட்சம் பேல்கள். தமிழகத்தில், பருத்தி உற்பத்தியை அதிகப்படுத்த தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகமும், தமிழ்நாடு வேளாண்மைத் துறையும் நடவடிக்கை எடுத்து வருகிறது. இது குறித்து, விவசாயிகளுக்கு குளிர்கால இறவை பருத்தி பயிரிட, உழவர் வயல் வெளி பள்ளிகள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பருத்தியில் தொழில் நுட்பங்கள், பூச்சிமருந்து மற்றும் ரசாயன உரங்களை குறைத்து, இயற்கை உரம் மூலம் வளர்க்கப்படும் பயிர்களில் மகசூல் அதிகரிக்கும். மேலும் பயிர்களில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த பஞ்சகவ்யம் பயன்படுத்த விவசாயிகள் முன்வரவேண்டும். விவசாயிகள் தொழுவத்திலும், பண்ணையிலும் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு பயிர் ஊக்கி பஞ்சகவ்யம் தயார் செய்யலாம்.

தயிர் ஊறல் ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரிக்கவும், அவற்றை பயிர்களுக்கு உபயோகிப்பதால் பூச்சிதாக்குதல் குறைந்து மகசூல் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். பஞ்கவ்யம் எல்லா பயிர்களுக்கும் பயிர் வளர்ச்சி ஊக்கியாகவும், நோய் பூச்சிக்கு எதிர்ப்புசக்தி கொடுக்கக் கூடியதாகவும் உள்ளது.

பஞ்சகவ்யத்தை பயிர்களுக்கு தெளித்த பின் பருத்தி, சூரியகாந்தி, கொத்தமல்லி பயிர்களில் கண்கூடாக கூடுதல் மகசூல் தருவதை காணமுடியும் என்பதால், பயிர்களுக்கு பஞ்சகவ்யத்தை பயன்படுத்த விவசாயிகள் முன்வரவேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**ஏழை விவசாயிகளுக்கு கறவை மாடு வழங்கல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2011,23:26 IST

தேன்கனிக்கோட்டை: தேன்கனிக்கோட்டை அடுத்த கோட்டை மடுவு கோபசந்திரம் கிராமத்தில் ஏழை விவசாயிகளுக்கு இலவச கறவை மாடுகள் வழங்கும் விழா நடந்தது. கலெக்டர் மகேஷ்வரன் தØலைமை வகித்து ஏழை விவசாயிகள் 45 பேருக்கு 45 கறைவை மாடுகளை வழங்கினார். தளி எம்.எல்.ஏ., ராமச்சந்திரன், ஓசூர் சப்-கலெக்டர் சந்தீப் நந்தூரி, மாவட்ட வருவாய் அலுவலர் பிரகாசம் முன்னிலை வகித்தனர். கலெக்டர் மகேஷ்டரின் பேசியதாவது: ஏழை மக்களுடைய வாழ்க்கை தரத்தை ÷ம்மபடுத்த அரசு கறவை மாடுகளை வழங்குகியுள்ளது.

இந்த நலத்திட்டத்தை பயன்படுத்தி ஏழை விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டும். இந்த கறவை மாடுகளை விற்பனை செய்து விட கூடாது. இந்த கறவை மாடுகளுக்கு உடல்நிலைபாதிப்பு ஏற்பட்டால் கால்நடை துறை மூலம் உடனுக்குடன் சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக கிருஷ்ணகிரியில் ஹெல்ஃப் லைன் அமைக்கப்பட்டுள்ளது.

கறைவை மாடுகளுக்கு உடல்நலம் பாதிக்கப்படும்போது, விவசாயிகள் 04343-236573 என்ற டெலிஃபோன் எண்ணில் ஹெல்ஃப் லைனை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவசாயிகள் பால் விற்பனை செய்ய இதே பகுதியில் பால் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த கூட்டுறவு சங்கத்தில் தினசரி 285 லிட்டர் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார். கால்நடை உதவி இயக்குனர் ஜெயராமன் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**மழை பெய்யாததால் விவசாயிகள் ஏமாற்றம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2011,23:43 IST

பொங்கலூர் : வட கிழக்கு பருவ மழை சீசன் துவங்கியும், குறைவான மழையே பெய்துள்ளதால், பொங்கலூர் பகுதி விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். வட கிழக்கு பருவ மழை வழக்கமாக செப்., மாதம் துவங்கி டிச., வரை நீடிக்கும். செப்., மாதத்தில் பெய்யும் மழையை நம்பி, விவசாயிகள் மானாவாரி நிலங்களில் சோளம், கம்பு போன்ற மாட்டுத்தீவன பயிர்களையும், கொள்ளு, உளுந்து, தட்டை உள்ளிட்ட பயிர் வகைகளையும் சாகுபடி செய்வர். நல்ல மழை பெய்தால், கால்நடைகளுக்கு தேவையான புல் வகைகள் வளர்ந்து தீவனப்பற்றாக்குறை நீங்கும்

என்று விவசாயிகள் எதிர்பார்த்தனர். பருவ மழை துவங்குவதற்கான அறிகுறியே இல்லாமல் இருப்பதால், விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு அடையாள அட்டை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 20,2011,23:33 IST

சூலூர் : சூலூர் தாலுகாவில் விவசாயிகளுக்கு உழவர் பாதுகாப்பு திட்ட அடை யாள அட்டை வழங்கும் பணி துவங்கியது. தமிழக அரசின் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு உழவர் பாதுகாப்பு அடை யாள அட்டை வழங்கப்படுகின்றன. சூலூர் தாலுகாவில் உள்ள நான்கு பிர்காவில் உள்ள 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் அடையாள அட்டை வழங்கும் பணி துவங்கியது. அந்தந்த கிராம நிர்வாக அலுவலகத்தில், தாலுகாவில் உள்ள 8,675 விவசாயிகளுக்கு அடையாள வழங்கப்படுகின்றன. சமூக நல பாதுகாப்பு திட்ட தாசில்தார் இந்திரா தலைமையில் அலுவலர்கள் அடையாள அட்டை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## நான்கு மாதங்களில்

## இந்தியாவின் தேயிலை இறக்குமதி 22% சரிவு

உலக தேயிலை உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும், பயன்பாட்டில் முன்னணியிலும் உள்ள நம்நாடு அதிக அளவில் தேயிலை இறக்குமதியிலும் ஈடுபட்டு வருகிறது. சீனா, கென்யா, மாளவி, வியட்நாம், இலங்கை, ஈரான், அர்ஜென்டினா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்து தேயிலையை இந்தியா இறக்குமதி செய்கிறது.

இறக்குமதி செய்யப்படும் தேயிலை மதிப்பு கூட்டப்பட்டு மறு ஏற்றுமதி செய்யப்படுகிறது. நடப்பு நிதி ஆண்டில் ஜூலை மாதத்துடன் முடிவடைந்த 4 மாத காலத்தில் நம்நாட்டின் தேயிலை இறக்குமதி 51.90 லட்சம் கிலோவாகும். இது கடந்த ஆண்டின் இதே காலத்தில் இறக்குமதியான 66.20 லட்சம் கிலோவை விட 22 சதவீதம் குறைவாக உள்ளது.

கடந்த 2010–ல் ஜனவரி–ஜூலை மாத காலத்தில் 1.16 கோடி கிலோ என்ற அளவில் இருந்த இறக்குமதி நடப்பாண்டின் இதே காலத்தில் 19 சதவீதம் குறைந்து 94.20 லட்சம் கிலோவாக சரிந்தது. நடப்பாண்டு ஜூலை மாதத்தில் இறக்குமதியான 16.70 லட்சம் கிலோ 2010 ஜூலையில் இறக்குமதியான 20.60 லட்சம் கிலோவை விட 19 சதவீதம் குறைவாகும்.

உலக தேயிலை உற்பத்தியில் 28 சதவீதமும், ஏற்றுமதியில் 14 சதவீதமும் பங்கினை கொண்டுள்ள இந்திய தேயிலை துறையில் சுமார் 20 லட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர். நம் நாட்டில் சுமார் 1600 தேயிலை தோட்டங்கள் உள்ளன.

தினகரன்

*அரிசி, கோதுமை விலை பாகிஸ்தானைவிட அதிகம்*

பதிவு செய்த நாள் : 9/21/2011 0:36:54



இஸ்லாமாபாத்: பாகிஸ்தானில் அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலை இந்தியா, வங்கதேசம் மற்றும் இலங்கையைவிட குறைவாக உள்ளதாக தேசிய விலை கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் தொடரும் கனமழை காரணமாக 60 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ள பல்வேறு பயிர்கள் தண்ணீரில் மூழ்கி உள்ளன. இதனால் உணவுப் பொருட்கள் பற்றாக்குறை ஏற்படும் சூழல் உருவாகி உள்ளது.

எனினும், கோதுமை, அரிசி, பயறு வகைகள், இறைச்சி, வெங்காயம் மற்றும் பூண்டு உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலை அண்டை நாடுகளைவிட குறைவாக உள்ளதாக இக்குழு தனது அறிக்கையில் கூறியுள்ளது.

*தேயிலை இறக்குமதி 22 சதவீதம் குறைந்தது*

பதிவு செய்த நாள் : 9/21/2011 0:35:37




புதுடெல்லி: கடந்த ஏப்ரல் முதல் ஜூலை வரை 4 மாதங்களில் நாட்டில் தேயிலை இறக்குமதி 51.9 லட்சம் கிலோவாக இருந்தது. இது முந்தைய ஆண்டின் இதே காலத்தில் இறக்குமதியான 66.2 லட்சம் கிலோவை விட 22 சதவீதம் குறைவு. தேயிலை பயன்படுத்துவதில் உலகிலேயே இந்தியா முதலிடம் வகிக்கிறது. வெளிநாடுகளில் இருந்து தேயிலையை அதிகளவில் இறக்குமதி செய்து பதப்படுத்தி, பேக்கிங் செய்து ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில், இறக்குமதி குறைந்ததால், மறுஏற்றுமதியும் குறைந்து வருகிறது. சீனா, கென்யா, வியட்நாம், இலங்கை, ஈரான், அர்ஜென்டினா, நேபாளம் ஆகிய நாடுகளில் இருந்து இந்தியா தேயிலை இறக்குமதி செய்கிறது. கடந்த ஆண்டு ஜூலை மாதத்தைவிட இந்த ஆண்டு ஜூலையில் மட்டும் தேயிலை இறக்குமதி 19 சதவீதம் சரிந்ததாக தேயிலை வாரிய செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

*வெங்காய ஏற்றுமதி தடை ரத்து*

பதிவு செய்த நாள் : 9/21/2011 0:31:43



புதுடெல்லி : வெங்காய உற்பத்தி குறைவு மற்றும் உள்நாட்டு தேவை, விலை உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டு ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்தது. இதனால், உள்நாட்டில் வெங்காயம் விலை நிலையாக இருந்தபோதும் ஏற்றுமதி மீது அதிக விலை கிடைக்கும் வாய்ப்பு பறிபோவதாக விவசாயிகளும் ஏற்றுமதியாளர்களும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதையடுத்து, மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையில் அதிகாரமிக்க அமைச்சர்கள் குழு டெல்லியில் நேற்று கூடி ஆலோசனை நடத்தியது. அதன் பிறகு நிருபர்களிடம் அறிவியல் தொழில்நுட்ப துறை அமைச்சர் விலாஸ்ராவ் தேஷ்முக் கூறுகையில், ''வெங்காயம் ஏற்றுமதி மீதான தடை விலக்கி கொள்ளப்பட்டுள்ளது'' என்றார்.